# பொதுக்காலம் 3ஆம் ஞாயிறு - இரண்டாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்ள மனம் மாறுங்கள் என அழைப்பு விடுக்கும் பொதுக்கால 3ஆம் ஞாயிறு திருப்பலிக்கு வந்திருக்கும் இறைமக்களை மனம் மகிழ்வோடு வரவேற்கின்றோம்.

“உன் மனம் தான் உன்னை வீழ்த்தும் ஆயுதம்; அது தெளிவாக இருக்கும் வரை உன்னை யாரும் வீழ்த்த முடியாது” என்று கவிஞன் ஒருவன் எழுதினான். நம் மனங்கள் சரியான வழியில் தெளிவாக பயணிக்கும் போது நம் வாழ்க்கை பிறர் வாசிக்கும் பாடமாகிறது.

இன்றைய முதல் வாசகத்தில் கடவுளின் சீற்றம் நினிவே நகர் மீது வெளிப்பட்டு நினிவே நாற்பது நாளில் அழிக்கப்படும் என்ற செய்தியை யோனா அறிவிக்கின்றார். நினிவே மக்கள் தங்கள் பாவச் செயல்களுக்காக மனம் வருந்தி மனமாற்றம் அடைந்து, தங்கள் பாதையை நோன்பின் மூலம் செம்மையாக்குகின்றனர். “என் கோபமோ ஒரு நிமிடம்” என்பதை ஆண்டவர் நினிவே மக்களுக்கு உணர்த்துகின்றார். இங்கு மக்களின் மனமாற்றம் மறுவாழ்வை பெற்றுத் தருகிறது.

இன்றைய சூழலில் மனமாற்றம் எவ்வாறு இருக்கிறது? பணத்திற்காக மனம் மாற்றமடைகிறது. நாமும் பேசும் அர்த்தமற்ற பேச்சுகளிலிருந்து மனம் மாறுவோம். துன்பம் வரும் போது துவண்டு விடும் நிலையிலிருந்து மனம் மாறுவோம். ஆணவத்தை அணிந்த மனங்கள் அன்பை வெளிப்படுத்தும் மனமாக மாறட்டும். கொடுஞ்சொற்களை சுமந்த மனங்கள் சுகமான வார்த்தைகளை உதிர்க்கும் மனங்களாகட்டும்.

இன்றைய இரண்டாம் வாசகமும், ‘உலகச் செல்வத்தை பயன்படுத்துவோர் அவற்றில் முழுமையாக ஈடுபடாதவர் போல் இருக்கட்டும்’ என்கிறது. இறைவன் இவ்வுலகை ஆளும் அதிகாரத்தையே தாம் படைத்த மக்களுக்குத் தந்தார். ஆனால் நாமோ இவ்வுலகச் செல்வத்தைத் துய்க்கும் பொருட்டு விண்ணக வாழ்வை மறக்கின்றோம். பொன் நகைகளையும், பட்டாடையும் அணிந்து வலம் வரும் பகட்டான வாழ்வை விரும்புகிறோம். வறியவனின் பசியையும், திக்கற்றவனின் துக்கங்களையும் கருணையற்ற கண்களால் காண்கிறோம். இதையே பவுலும், பகட்டில் ஒட்டியிருக்கும் பற்றுதலை நீக்கு என்று இரண்டாம் வாசகத்தில் கூறுகிறார்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு, “மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள், என் பின்னே வாருங்கள்; நான் உங்களை மனிதர்களைப் பிடிப்பவர் ஆக்குவேன்” என்று சீடர்களை அழைக்கிறார்.

அன்பு செய்து வாழும் போது மனிதர்களாகிறோம். பிற மனிதர்களை அன்பால் பிடிப்பவர் ஆகிறோம். ஆகவே அன்பு தான் பிரதானம். “தம் மனச்சான்றால் கண்டிக்கப்படாதோர் பேறுபெற்றோர்” என்கிறது சீராக்கின் ஞான நூல். எனவே ‘மனமாற்றம் அடைவோம்; நல் மனத்தோராய் வாழ்வோம்’ என்ற மனத்தோடு இத்திருப்பலியில் இணைவோம்.

## மன்றாட்டுகள்

*பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

1. என் பின்னே வாருங்கள்! என்று அழைத்தவரே எம் இறைவா!

உம் அழைப்பை ஏற்று அனைத்தையும் துறந்து, நற்செய்தி பணியாற்றும் எம் திருத்தந்தை, ஆயர்கள், திருச்சபை பணியாளர்களை ஏற்றுக் கொள்ளும்.

மக்கள் மனம்மாற அழைப்பு விடுத்து, நல் மேய்ப்பர்களாகி மக்களை சிறப்பாக வழிநடத்த உம் துணை வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நிலையான செல்வமே இறைவா!

இவ்வுலக வாழ்விற்கு தேவையான அழிந்து போகும் செல்வங்களில் ஈடுபாட்டை செலுத்தும் நாங்கள், மன அமைதி, அன்பு, பகிர்ந்து வாழ்தல் போன்ற மனித நேயப் பண்புகளை பெற்று வாழும் வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள் என்று அழைப்பவரே எம் இறைவா!

உமது வார்த்தைகளை தியானிக்கும் நாங்கள் உதட்டளவில் மட்டும் உச்சரிக்காமல், வார்த்தைகளை வாழ்வாக்கி நல் மனத்துடன் வாழ்ந்து உமக்கு சான்று பகரும் மக்களாக எங்களை மாற்றியருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. மனந்திரும்பும் பாவியை பரிவோடு ஏற்றுக்கொள்பவரே எம் இறைவா!

பாவ வாழ்வில் சிக்கி, போதை பழக்கம், சமூக அக்கறையின்மை, உறவுகளிலிருந்து பிரிந்து தவறான வழியில் பயணிக்கும் இன்றைய இளைய சமுதாயத்தினரை உம் அன்பில் அரவணைத்து, அவர்களுக்கு புதுவாழ்வு தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. கருணையின் தெய்வமே இறைவா!

எங்கள் பகுதியில் போதுமான அளவு மழை பொழியச் செய்து, சிறந்த இயற்கைச் சூழலைத் தந்து விவசாயம் மேம்படவும், பொருளாதார முன்னேற்றம் பெறவும், குடும்பங்களில் மகிழ்ச்சி, சமாதானம் பெருகவும் உமதருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.

Rev. Fr. Amirtha Raj Sundar J., amirsundar@gmail.com; + 91 944 314 0660;

www.arulvakku.com